DEPOSITION OF WITNESS
(In the Court of the Principal District Munsif, Sankarankovil
O.S. No. 362/2015

| | |
|---|---|
| Deposition of Witness for | : Dw 1 |
| Name | : பார்வதி |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 13.03.2023 |

Solemnly affirmed in accordance with provision of act 1969 (44 of 1969) on the day of 13th March 2023.

முதல் விசாரணை

நான் வழக்கின் 1ம் பிரதிவாதி. நான் இன்று இந்த வழக்கில் எனது சத்தியபிரமாணம் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

1ம் பிரதிவாதியின் பெயரிலுள்ள புதிய குடும்ப அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். அது **பி.வா.சா.ஆ.1** (அசல் ஆவணத்துடன் ஒப்பீடு செய்து குறியிடப்படுகிறது)

பிரதிவாதிகளின் பழைய குடும்ப அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். அது **பி.வா.சா.ஆ.2** (அசல் ஆவணத்துடன் ஒப்பீடு செய்து குறியிடப்படுகிறது)

12.03.1998 தேதியில் 1ம் பிரதிவாதி வாதிகளின் மகன் ரவி கல்யாணசுந்தரத்திற்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்கிறேன். அது **பி.வா.சா.ஆ.3.**

29.08.2018 தேதியில் குருவிகுளம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் வழங்கிய புற நோயாளி சீட் நகல் தாக்கல் செய்கிறேன். அது **பி.வா.சா.ஆ.4**

10.09.2015 தேதியில் 1ம் பிரதிவாதி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தனி பிரிவு தலைமை செயலகத்திற்கு அனுப்பிய மனு நகல் தாக்கல் செய்கிறேன். அது **பி.வா.சா.ஆ.5**

**பி.வா.சா.ஆவணம் 4 வாதி தரப்பில் நகல் என்பதால் குறியீடு செய்யமுடியாது என்று ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது, மற்றும் பி.வா.சா.ஆ.5 வழக்கிற்கு பின்னீட்டு ஏற்பட்ட ஆவணம் என்றும் எதிர்வழக்குரையில் குறிப்பிடபடவில்லையென்றும் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.**

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

நான் தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென பிரார்த்திக்கிறேன்.